*2005 செப்டம்பர் 22]*

எனவே, இங்கேயிருக்கின்ற புள்ளி விவரக் கணக்கின்படி, அங்கே குறைவான மின்னழுத்தம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதோடுமட்டுமல்ல, கூடுதல் தேவை கேட்டு அங்கே விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே, இன்னும் வருங்காலத்தில் நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, கூடுதல் தேவைக்காக விண்ணப்பங்கள் வருமேயானால், அதுகுறித்து நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 12, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**12—**

**கால்நடை மருத்துவமனை**

***20471—திரு. கு. அன்பழகன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நிலக்கோட்டை தொகுதி, செம்பட்டியில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) - ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, செம்பட்டி அருகில் 2 கி.மீ. தூரத்தில் சமத்துவபுரத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் ஜம்புரிதிக்கோட்டையில் மற்றொரு கால்நடை கிளை நிலையமும், 3 கி.மீ. தூரத்தில் ஆத்தூரில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவைமூலம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைப் பணிகள் செம்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. ஆதலால், செம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எறும்பு முதல் எண்ணாயிரம் ஜீவஜந்துகளுக்கும் படி அளக்கிற பரமசிவனையும் மிஞ்சி, இன்றைக்குத் தமிழகத்தை ஆண்டு

கொண்டிருக்கிற எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், என்னுடைய நிலக்கோட்டை தொகுதியில் செம்பட்டியைச் சுற்றி சுமார் 35 கிராமங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பக்கத்திலே கால்நடை மருத்துவமனைகள் அதிகமாக இருக்கின்றன, அந்த மருத்துவமனை போதுமென்று சொன்னார்கள். ஆனால், செம்பட்டியிலே அந்த மருத்துவமனை இருக்கவேண்டும். தென் மாவட்டங்களிலே கூடுகிற மாட்டுச் சந்தைகளைவிட, செம்பட்டியில்தான் பெரிய வாரச் சந்தை, மாட்டுச் சந்தை கூடுகிறது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு வருகின்றன. ஆகவே, அதன் சிறப்புக் கருதி செம்பட்டியிலே கால்நடை மருத்துவமனையை அமைக்க நம்முடைய தங்கத் தலைவியினுடைய ஆட்சியிலே மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க மாநில திட்டக் குழுவால் விதிக்கப்பட்ட தடை இன்னும் அமலில் உள்ளதால், புதிய கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்த தற்போது வாய்ப்பில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய செம்பட்டி கிராமம் சிறப்புப்பெற்ற கிராமம் என்பதாலும், வாரச் சந்தை அந்த இடத்திலே வாரா வாரம் கூடி வருவதாலும், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய செம்பட்டி கிராமத்திலே புதியதாக ஒரு கால்நடை கிளை நிலையம் இந்த நிதியாண்டில் கட்டிக் கொடுப்பதற்கு, நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில் செய்து கொடுக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், சிங்காநல்லூர் கால்நடை மருந்தகம் தனியார் வாடகைக் கட்டடத்திலே இயங்குவது சம்பந்தமாக சொல்லப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். இப்போது வரை அது கட்டப்படவில்லை என்பது அமைச்சருக்கும், அரசுக்கும்

*2005 செப்டம்பர் 22]*

*தெரியுமா? மீண்டும் அதைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடு இனிமேலாவது செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த ஒரு மாநில முதல்வரும் செய்யாத அற்புதமான அரிய திட்டமான இமாலய சாதனையைப் படைத்திருக்கின்ற முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இன்று ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் சுமார் 19.50 இலட்சம் ரூபாய் செலவிலே, இந்த ஆண்டு 90 புதிய கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்கு நம்முடைய அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அந்தவகையிலே, வருகின்ற நிதியாண்டில், நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, சிங்காநல்லூர் தொகுதியில் கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. என். நன்மாறன்.*

**திரு. என். நன்மாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அனுப்பானடி, கீரைத்துறை ஆகிய இடங்களில் இயங்கி வருகிற கால்நடை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நம்முடைய அம்மாவினுடைய அரசு தமிழகத்தில் 306 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியிருக்கின்றார்கள். அந்தவகையிலே மீண்டும் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இன்னும் அதிக அளவிலே கால்நடை கிளை நிலையங்களைக் கால்நடை மருந்தகங்களாக மாற்றுவதற்குக் குறிப்பு வைத்திருக்கின்றேன். நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கும் நல்ல முறையிலே பதில் கிடைக்கின்ற வகையிலே அவருடைய ஊரிலேயும் கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*